அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 20/95

எனது இல. 11-2/9/361/15(எச்)
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07
1995, யூன் மாதம் 13 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

**பதவியை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவர் அல்லது ஏதேனும் ஒழுக்காற்றுக் கட்டளை விதிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் காரணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் தாபனக் கோவையின் திருத்தங்கள் அத்தியாயம் II, V, XXVIII, XLVIII**

தாபன விதிக்கோவையின் பின்வரும் பிரிவுகள் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

(1) அத்தியாயம் V பிரிவு 7:4

"7:4 போதிய அளவு காலப்பகுதியில் (போதிய காலப் பகுதி என்பது மூன்று மாதங்கள் ஆகும்) அவர் சுய விருப்பப்படி தனது விடுதலைக்குரிய காரணங்கள் காட்டப்படுமிடத்து உரிய ஒழுக்காற்று அதிகாரி ஒழுக்காற்று விதிகளுக்கு அமைவாக அக்காரணங்களை பரிசீலனை செய்ய வேண்டும். அவ்வாறு பரிசீலனை செய்யப்பட்ட பின் உத்தியோகத்தர் சேவைக்கு வருவதைஅனுமதிக்கவோ அல்லது அனுமதிக்காமல் இருக்கவோ அதிகாரிக்கு முடியும் (அத்தியாயம் XLVIII பார்க்கவும்)

(2) அத்தியாயம் XXVIII - உபபிரிவு - 6:2:1

"6:2:1 மூன்று மாதங்களுக்கு முன் வழங்கப்பட்ட ஒரு கட்டளைக்கு எதிராக மேன் முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டு அதன் தாமதம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்கள் அதில் குறிப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில்.

(3) அத்தியாயம் XLVIII - பிரிவு - 17:4

"17:4 ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப்பட்ட கட்டளைத் திகதி தொடக்கம் மூன்று மாதங்களுக்குள் எழுத்துமூல மேன் முறையீடொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

02. மேலும் "தகுதிகாண் நிலைக் காலத்தில் இருக்கும் உத்தியோகத்தர்களின் நியமனங்களை முடிவுறுத்தல் பற்றிய மேன் முறையீடுகள் தாபன விதிக்கோவையின் திருத்தங்கள் அத்தியாயம் 11" என்று 1993.09.06 ஆந் திகதி 20/93 ஆம் இலக்கத்தின் கீழ் வெளியிடப்பட்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவின் இறுதியில் குறிப்பிடப்பட்ட

"(தயவு செய்து தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXVIII இல் 6:2, 6:2:1 ஆம் உபபிரிவுகளையும் பார்க்கவும்)"

என்பது திருத்தப்பட்ட மேலே 01 இன் (2) ஆம் உபபிரிவுடன் பொருந்தாததால் அதனை இத்தால் ரத்துச் செய்கிறேன்.

03. இச்சுற்றறிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.